# நமது தின கனி


காலை நாளிதழ்

NAMADHU DHINA KANI Daily Morning

Vol : 01 | Issue : 185 | 4 Pages | 6.2.2024 | Tuesday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 | Tiruppur

மலர் : 01 | இதழ் : 185 | 4 பக்கங்கள் | 6.2.2024 | செவ்வாய்க்கிழமை | விலை ரூ. 6 | வருட சந்தா ரூ.1825 | திருப்பூர்


## இத்தாலி சிறையில் இருந்து தப்பிய மாபியா தலைவன் பிரான்சில் கைது



இத்தாலி, பிப்.6

இத்தாலியில் கொலை, கொள்ளை, ஆள் கடத்தல், போதை மருந்து வியாபாரம் உள்ளிட்ட சட்டவிரோத செயல்களில் பல "மாபியா" கும்பல்கள் ஈடுபட்டு வருகின்றன.

இத்தாலியின் போகியா (Foggia) எனும் நகரில் செயல்பட்டு வந்த "கார்கனோ குழு" (Gargano clan) எனப்படும் இத்தகைய ஒரு கும்பலின் தலைவன், மார்கோ ராடுவோனோ (40).

30 வருட நீண்டகால தேடலுக்கு பிறகு காவல்துறையால் கைது செய்யப்பட்ட மார்கோவிற்கு, நீதிமன்றத்தால் 24வருட சிறை தண்டனை வழங்கப்பட்டது. மார்கோ மீது போதை மருந்து கடத்தல் உள்ளிட்ட பல குற்றச்சாட்டுகள் பதிவாகி இருந்தன.

இதையடுத்துஇத்தாலியின்தீவுபிரதேசமானசார்டினியாவின்நுவோரோ பகுதியில் உள்ள கடுமையான காவல் கட்டுப்பாடுகள் நிறைந்த சிறையில் மார்கோ அடைக்கப்பட்டான்.

கடந்த 2023 பிப்ரவரி மாதம், மார்கோ, சார்டினியாவின் சிறை அறையில் இருந்து வெளியே வந்து, பல போர்வைகளை ஒன்றுடன் ஒன்று இணைத்து, சிறைச்சாலையின் மதில் சுவரையும் தாண்டி, கீழே குதித்து தப்பிச் சென்றான்.

ஐரோப்பிய நாடுகளின் குற்றவாளிகளின் தேடல் பட்டியலில் உள்ள முக்கிய குற்றவாளியான மார்கோ தப்பியது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

இதையடுத்து ஐரோப்பிய ஒன்றிய காவல்துறை மார்கோவை தேடி வந்தது.

ஐரோப்பிய நாடுகளில் தேடுதல் வேட்டை முடுக்கி விடப்பட்டிருந்த நிலையில், மார்கோ, பிரான்ஸ் நாட்டின் அலெரியா பகுதியில் உள்ள ஒரு உணவகத்தில் ஒரு பெண்ணுடன் உணவருந்தி கொண்டிருந்த போது பிரான்ஸ் காவல்துறையினர் அவனை கைது செய்தனர்.

போலியான பெயர் மற்றும் போலி பதிவு எண் கொண்ட வாகனத்துடன் அப்பகுதியிலேயே அவன் வசித்து வந்ததும் தற்போது தெரிய வந்துள்ளது.

மார்கோ சிறையிலிருந்து தப்பி சென்றது இத்தாலி அரசுக்கு பெரும் அவமானமாக கருதப்பட்டது.

இந்நிலையில், அவன் மீண்டும் பிடிபட்டதால், தங்கள் நாட்டிற்கு அவனை அழைத்து செல்லும் முயற்சியில் பிரான்ஸ் அதிகாரிகளுடன் தொடர்பில் உள்ளனர்.

## இருளில் வாழும் மக்களுக்கு ஒளி வழங்கும் உயர்ந்த உள்ளம்



ரஷியா, பிப்.6

கடந்த 2022 பிப்ரவரி மாதம், உலக வல்லரசு நாடுகளில் ஒன்றான ரஷியா, தனது அண்டை நாடான உக்ரைனை "சிறப்பு ராணுவ நடவடிக்கை" எனும் பெயரில் ஆக்கிரமித்தது. இதை எதிர்த்து உக்ரைன், அமெரிக்கா மற்றும் மேற்கத்திய நாடுகளின் பொருளாதார மற்றும் ராணுவ உதவியுடன் போரிட்டு வருகிறது.

இரு தரப்பிலும் உயிர்சேதங்களும், கட்டிட சேதங்களும் பலமாக ஏற்பட்டிருந்தும், போர் தீவிரமாக 710 நாட்களை கடந்து தொடர்கிறது.

ரஷியாவின் வான்வழி தாக்குதலால் உக்ரைன் நாட்டில் சுமார் 40 சதவீத மின் உற்பத்தி நிலையங்கள் சேதமடைந்தன. இதனால் உக்ரைனின் பல பகுதிகளில் மக்கள் மின்சாரம் இன்றி தவித்து வருகின்றனர்

உதவிகள் கேட்டு அமெரிக்க அதிபரை சந்தித்த உக்ரைன் அதிபர் வோலோடிமிர் ஜெலன்ஸ்கி, தங்கள் நாட்டு மின்சார உற்பத்தி நிலையங்களை இயங்க செய்யவும் அமெரிக்க உதவியை கேட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. இங்கிலாந்தின் கேம்பிரிட்ஜ் நகரத்தில் இருந்து சிறிது தொலைவில் உள்ளது சாஸ்டன் (Sawston) கிராமம்.

சாஸ்டன் பகுதியில் உள்ள செயின்ட் மேரி தேவாலயத்தில் பாதிரியாராக இருப்பவர், 29 வயதான வில் லயான் டுப்மேன் (Will Lyon Tupman).

உக்ரைன் மக்கள் இருளில் அவதிப்படுவதை கேள்விப்பட்டு 2022லிருந்தே பாதிரியார் டுப்மேன், பாதி உபயோகப்படுத்தப்பட்ட நிலையில் உள்ள மெழுகுவர்த்திகளை சேகரிக்க தொடங்கினார்.

தங்கள் தேவாலயத்திலும் இருந்த பயன்படுத்தப்படாத மெழுகுவர்த்திகளையும் தனது சேகரிப்பில் இணைத்தார். மேலும், இவரது கோரிக்கைக்கு உதவ பலர் முன் வந்ததால், தங்கள் வீட்டில் இருந்த பாதி எரிந்த நிலையில் உள்ள மற்றும் உபயோகப்படுத்தாத மெழுகுவர்த்திகளையும் அவரிடம் வழங்கினர். இவையனைத்தையும் பாதிரியார் டுப்மேன், அங்குள்ள ஒரு மெழுகுவர்த்தி உற்பத்தி நிலையத்தில் கொடுத்து, உருக்கி, புது மெழுகுவர்த்திகளாக மாற்றினார். அந்த புது மெழுகுவர்த்திகளை உக்ரைன் நாட்டிற்கு அனுப்பி வைத்தார். இந்த அரிய பணியை, பாதிரியார் டுப்மேன் தற்போது வரை தொடர்கிறார். இவரது முயற்சிக்கு அப்பகுதி மக்களிடம் இருந்தும், சுற்று வட்டாரப்பகுதிகளில் உள்ள சர்ச்களிலில் இருந்தும் ஆதரவு பெருகி வருகிறது. உக்ரைன் மக்கள் டுப்மேனின் இந்த பெரும் உதவியினால் பயனடைந்துள்ளதால், அவருக்கு நன்றி தெரிவித்து வருகின்றனர்.

# பிரேமலதாவின் கையில் கேப்டனின் முகம்: நெஞ்சை நெகிழ வைக்கும் செயல்

சென்னை, பிப்.6

தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த் மரணமடைந்து ஒரு மாதத்திற்கும் மேல் ஆகிறது. கோயம்பேட்டில் உள்ள தே.மு.தி.க. அலுவலகத்தில் விஜயகாந்த் உடல் அடக்கம் செய்யப்பட்ட இடத்தில் பொதுமக்கள் தினமும் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தி வருகிறார்கள்.


விஜயகாந்த் மீது அவரது கட்சியினரும் பொது மக்களும் வைத்திருக்கும் அளவு கடந்த பாசம் இதன் மூலம் வெளிப்பட்டுள்ளது. விஜயகாந்த் மீது அவரது மனைவி மற்றும் குடும்பத்தினரும் மிகுந்த பாசம் வைத்திருந்தனர்.

உடல் நலக்குறைவால் விஜயகாந்த் கடந்த சில ஆண்டுகளாகவே ஓய்வெடுத்து வந்த நிலையில் அவரது மனைவி பிரேமலதா விஜயகாந்த்தை ஒரு தாய் போல இருந்து கவனித்துக் கொண்டார் என்றே கட்சியினர் அவரைப் பற்றி குறிப்பிடுவதுண்டு. விஜயகாந்தால் கடைசி காலத்தில் எந்த செயலையும் தனியாக செய்ய முடியாத நிலை இருந்து வந்தது.

அப்போது அவருக்கு தோள் கொடுத்து துணையாக இருந்தது பிரேமலதாவும் அவரது குடும்பத்தினரும் தான்.

விஜயகாந்த் உயிருடன் இருந்த போது அவருக்கு பணி விடைகள் செய்யும் வீடியோக்களையும் இதற்கு முன்பு பிரேமலதா வெளியிட்டுள்ளார். விஜய காந்த்துக்கு அவர் முடிவெட்டி டை அடித்து விடும் வீடியோ ஒன்று அவரது மரணத்திற்கு பிறகும் வைரலாக பரவியது. இப்படி விஜயகாந்தின் மீது வைத்திருந்த அன்பு, பாசம் காரணமாக அவரது பெயரில் அறக்கட்டளை ஒன்றையும் தொடங்க இருப்பதாக பிரேமலதா அறிவித்து உள்ளார். விஜயகாந்தின் நினைவிடத்திற்கு அஞ்சலி செலுத்த வருபவர்களுக்கு தினமும் அன்னதானமும் வழங்கப்பட்டு வருகிறது. விஜயகாந்தின் எண்ணப்படியே பிரேமலதாவின் முயற்சியால் இந்த அன்னதானம் வழங்கப்பட்டு வருகிறது. இந்த நிலையில் பிரேம லதா தனது கணவர் விஜயகாந்தின் உருவத்தை வலது கையில் டாட்டுவாக





வரைந்துள்ளார். இது தொடர்பான வீடியோ சமூக வலைத்தளங்களில் தற்போது வைரலாகி வருகிறது.

டாட்டூ கலைஞர் ஒருவர் பிரேமலதாவை அமர வைத்து அவரது வலது கையில் விஜயகாந்த் சிரித்த முகத்துடன் இருக்கும் உருவத்தை வரைந்துள்ளார். அதனை பிரேமலதா பார்த்து ரசிக்கும் காட்சிகளும் அந்த வீடியோவில் இடம் பெற்றுள்ளன.

இந்த வீடியோவை தே.மு.தி.க.வினரும் பொது மக்களும் தங்களது நண்பர்களுக்கு அனுப்பி வருகிறார்கள் இதன் மூலமாக தனது கணவர் விஜயகாந்த் மீது பிரேமலதா வைத்துள்ள அன்பின் வெளிப்பாடு மீண்டும் வெளிப்பட்டு இருப்பது குறிப்பிடத்தக்கது.

# "அரசனுக்கே இந்த அரியாசனம்" என்ற வாசகத்துடன் விஜய் கட்சியினரின் பரபரப்பு போஸ்டர்கள்

நெல்லை, பிப்.6

தமிழக வெற்றி கழகம் என்ற பெயரில் நடிகர் விஜய் தனது கட்சி பெயரை அறிவித்து அரசியல் பயணத்தை தொடங்கியுள்ளார்.

கட்சியின் பெயரை அறிவித்ததை தொடர்ந்து தற்போது கட்சி கொடியை தயார் செய்யும் பணியில் நடிகர் விஜய் மும்முரமாக ஈடுபட்டுள்ளார்.

இதற்கிடையே விஜய் மக்கள் இயக்கத்தில் இருந்து கட்சியாக மாறப் போவதாக அறிவித்ததை தொடர்ந்து தமிழகம் முழுவதும் அவரது கட்சியினர் உற்சாகம் அடைந்துள்ளனர்.

பல்வேறு இடங்களில் தங்களது மகிழ்ச்சியை வெளிப்படுத்தும் விதமாக பட்டாசுகள் வெடித்தும், இனிப்பு வழங்கியும் கொண்டாடி வருகின்றனர். மேலும் அட்டகாசமான சுவரொட்டிகளையும் ஒட்டி வருகின்றனர்.

மாநகர பகுதிகளில் மாவட்ட இளைஞரணி தலைவர் ராஜகோ




பால் தலைமையில் திரளான இளைஞரணி நிர்வாகிகள் பொதுமக்களை ஈர்க்கும் வகையில் வசனங்கள் அடங்கிய சுவரொட்டிகளை ஒட்டி வருகின்றனர்.

அந்த வகையில் பாளை தியாகராஜ நகர் பகுதியில் 2026 சட்டமன்ற தேர்தலில் வெற்றி வாகை சூட வருகை தரும் தலைவர் தளபதியின் தமிழக வெற்றி கழகம் வருக வருக என போஸ்டர்கள் ஒட்டி உள்ளனர்.

இதேபோல் அரசனுக்கே இந்த அரியாசனம். தலைவரின் தமிழக வெற்றி கழகம் வருக வருக மிஷன் 2026 என்ற வாசகம் அடங்கிய போஸ்டர்களும் ஒட்டப்பட்டுள்ளது.

இதேபோல் பாளை தலைமை இளைஞர் அணி சார்பில் ஒட்டப்பட்டுள்ள போஸ்டர்களில் மாற்றம் உன்னிடம் இருந்து தொடங்கட்டும். நாளைய முதல்அமைச்சரே என்றும், நாளைய தமிழகமே என்றும் பல்வேறு வசனங்களுடன் போஸ்டர்கள் ஒட்டப்பட்டுள்ளது.

இவ்வாறாக நெல்லை மாநகர இளைஞரணி சார்பில் பரவலாக அதிரடி வசனங்களுடன் போஸ்டர்கள் ஒட்டப்பட்டுள்ளன.

கட்சியின் அடுத்த கட்ட செயல்பாடுகள் பற்றி மக்களை நேரில் சந்தித்து தெரிவிக்குமாறு விஜய் தனது ரசிகர்களுக்கு தெரிவித்துள்ளார். அதன்படி விஜய் ரசிகர்களும் பல்வேறு அரசியல் கட்சி பிரமுகர்கள், இளைஞர்கள், இளம்பெண்களை தங்கள் கட்சியில் இணைந்து பணியாற்றுவது குறித்து தொடர்பு கொண்டு பேசி வருகின்றனர்.

# இடியாப்ப சிக்கலில் இந்தியா கூட்டணி தி.மு.க. மட்டுமே சுமூக உறவுடன் நீடிக்கிறது

சென்னை, பிப்.6

பாராளுமன்ற தேர்தல் சூடு பிடிக்க தொடங்கிவிட்டது. பாரதிய ஜனதா கட்சி மிக விரைவில் அதிரடியாக வேட்பாளர் பட்டியலை வெளியிட்டு விடும் என்று டெல்லி வட்டார தகவல்கள் தெரிவிக்கின்றன.

பாரதியஜனதாவின்நடவடிக்கைகள் அனைத்தும்அடுத்தடுத்துஅதிரடியாக இருக்கும் என்று கூறப்படுகிறது. கூட்டணி தேர்வு என தொகுதி பங்கீடு, வேட்பாளர் தேர்வு அனைத்து விவகாரங்களிலும் பாரதிய ஜனதா ரகசியத்தை கடை பிடிக்கிறது.

தமிழகத்திலும் பாரதிய ஜனதாவின் வளர்ச்சியும், எழுச்சியும் பிரமிக்க தக்க வகையில் உள்ளது. அதே சமயத்தில் தேசிய அளவில் இந்தியா கூட்டணியின் நிலைமை நாளுக்கு நாள் பரிதாபமாக மாறிக் கொண்டு இருக்கிறது.

இந்தியா கூட்டணியில் காங்கிரஸ், தி.மு.க., ராஷ்டீரிய ஜனதா தளம், ஐக்கிய ஜனதாதளம், சமாஜ்வாடி, சிவசேனா, தேசியவாத காங்கிரஸ், திரிணாமுல் காங்கிரஸ், இந்திய கம்யூனிஸ்டு, மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டு, இந்திய யூனியன் முஸ்லிம் லீக் உள்பட 28 கட்சிகள் இருந்தன.

திடீரென ஐக்கிய ஜனதா தளம் தலைவர் நிதிஷ்குமார் அந்தர் பல்டி அடித்து இந்தியா கூட்டணியில் இருந்து விலகி பாரதிய ஜனதா கூட்டணிக்கு போய்விட்டார். இது இந்தியா கூட்டணிக்கு ஏற்பட்ட மிகப்பெரிய பின்னடைவாகும்.

அடுத்து இந்தியா கூட்டணியில் இதுவரை ஒரு மாநிலத்தில் கூட சுமூகமான தொகுதி உடன்பாடு ஏற்படவில்லை. மேற்கு வங்காளத்தில் மம்தா பானர்ஜி காங்கிரசைமிரளவைத்துக்கொண்டே இருக்கிறார்.

இரண்டே இரண்டு தொகுதிதான் தருவேன் என்ற அவர் தனது பிடிவாதத்தை இன்றுவரை தளர்த்தவில்லை. காங்கிரஸ் ஒத்துவராவிட்டால் திரிணா முல் காங்கிரஸ் தனித்து போட்டியிடும் என்று அவர் உறுதியாக இருக்கிறார்.

உத்தரபிரதேசத்தில் அகிலேஷ் யாதவ் காங்கிரசை அலற வைத்துள்ளார். மொத்தம் உள்ள 80 தொகுதிகளில் வெறும் 11 தொகுதி தான் காங்கிரசுக்கு தரப்ப டும் என்று அவர்அறிவித்தார்.அவரைகாங்கிரசார் சமரசம் செய்து கொண்டு இருக்கிறார்கள்.

கொஞ்சம் மனம் இரங்கி இருக்கும் அகிலேஷ் யாதவ் இறுதியில் 15 முதல் 20 தொகுதிகள் வரை கொடுக்கலாம் என்று கூறப்படுகிறது.

பீகாரில் லல்லு பிரசாத் யாதவ் ஓரளவு தொகுதிகளை காங்கிரசுக்கு கொடுப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மராட்டியத்தில் சிவசேனாவுக்கும், தேசியவாத காங்கிரசுக்கும் போக மிச்சம் இருக்கும் இடங்கள் தான் காங்கிரசுக்கு கிடைக்கும்.

டெல்லியிலும், பஞ்சாபிலும் ஆம்ஆத்மி கட்சி ஆதிக்கம் செலுத்துகிறது. அந்த கட்சி காங்கிரசுக்கு அதிக இடங்கள் தர இயலாது என்று திட்டவட்டமாக கூறி உள்ளது. இதனால் தலைநகரிலும் காங்கிரஸ் சரியான பிடிமானம் இல்லாமல் தவிக்கிறது.

அதுபோல வேறு எந்த மாநிலத்திலும்காங்கிரசுக்குதோழமை கட்சிகள் சாதகமாக இல்லை. விதிவிலக்காக தமிழகத்தில் மட்டும் தி.மு.க. சற்று பெருந்தன்மையுடன் காங்கிரசை நடத்துகிறது. கடந்த தடவை போல 9 தொகுதிகளை காங்கிரஸ் மீண்டும் கேட்கிறது.

தி.மு.க. அதிக தொகுதிகளில் போட்டியிட உறுதியாக முடிவு செய்தால் காங்கிரசுக்கு 7 தொகுதிகள்தான் கிடைக்கும் என்கிறார்கள்.

இந்த நிலையில் மற்ற எந்த மாநிலங்களிலும் காங்கிரசுக்கு ஒருமித்த நிலை இல்லை. இதன் காரணமாக இந்தியா கூட்டணி இடியாப்பசிக்கலில்உள்ளது. கேரளா, ஆந்திரா, தெலுங்கானா, மத்திய பிரதேசம், குஜராத், ராஜஸ்தான், ஒடிசா உள்பட பல மாநிலங்களில் காங்கிரஸ் தனித்து விடப்பட்டுள்ளது.

# எழும்பூரில் மெட்ரோ ரெயில் நிலைய வாகன நிறுத்தம்: இடமாற்றம்

சென்னை, பிப்.6

எழும்பூர் ரெயில் நிலையம் பல்வேறு நவீன வசதிகளுடன் ரூ.734.91 கோடி மதிப்பில் மறுசீரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்படுகிறது.

இதற்கான பணிகள் தற்போது தொடங்கப்பட்டு நடந்து வருகின்றன. மறு சீரமைப்பு பணியில் ரெயில் நிலையத்தின் பிரதான நுழைவு வாயில் காந்தி இர்வீன் சாலையிலும் பின்புற நுழைவு வாயில் பூந்தமல்லி நெடுஞ்சாலையிலும் அமைய உள்ளது.



மேலும் ரெயில் நிலைய கட்டிடங்கள், பலஅடுக்கு வாகன நிறுத்துமிடம், காந்திஇர்வின் சாலை மற்றும் பூந்தமல்லி சாலை அருகே வணிக வளாகங்கள் அமைத்தல், புதிய பார்சல் அலுவலகம், நடை மேம் பாலம், பார்சல்களை கையாள நடைமேம்பாலம், புதிய ரெயில்வே குடியிருப்புகள் கட்டுதல் உள்ளிட்ட பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன. எழும்பூர் மெட்ரோ ரெயில் நிலையம் அருகே வாகன நிறுத்தும் இடம் உள்ளது. தற்போது அந்த பகுதியில் நடைபெற்று வரும் ரெயில்வே பணிகளால் மெட்ரோ ரெயில் நிலைய வாகன நிறுத்தும் இடம் நாளை முதல் இட மாற்றம் செய்யப்பட உள்ளது. இது தொடர்பாக சென்னை மெட்ரோ ரெயில் நிர்வாகம் வெளியிட்டு உள்ள அறிவிப்பில், "எழும்பூர் ரெயில் நிலையம் மற்றும் எழும்பூர் மெட்ரோ ரெயில் நிலையம் ஆகியவற்றில் தெற்கு ரெயில்வேயின் பன்முக ஒருங்கிணைப்புப் பணிகள் நடை பெற்று வருகின்றன.

இதனால் எழும்பூர் மெட்ரோ ரெயில் நிலையத்தில் உள்ள வாகன நிறுத்துமிடம் எழும்பூர் தெற்கு ரெயில்வே பயணச்சீட்டு முன்பதிவு அலுவலகத்திற்குப் பக்கத்தில் இடம் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இந்த இட மாற்றம் செய்யப்பட்ட வாகன நிறுத்துமிடத்தை அனைத்து பயணிகளும் நாளை(5ந்தேதி) முதல் பயன்படுத்திக் கொள்ளலாம்" என்று கூறப்பட்டு உள்ளது.

# இ.பி.எஸ். துரோகத்திற்கு பாராளுமன்ற தேர்தலில் பதிலடி தினகரன்

திண்டுக்கல், பிப்.6

அம்மா மக்கள் முன்னேற்ற கழக பொதுச் செயலாளர் டி.டி.வி.தினகரன் இன்று திண்டுக்கல் வந்தார். அப்போது நிருபர்களிடம் அவர் கூறியதாவது:

தமிழகத்தில் தீய சக்திக்கும் துரோக சக்திக்கும் மாற்றாக நமது இயக்கம் உருவாகி வருகிறது. எம்.ஜி.ஆர். உருவாக்கி ஜெயலலிதா வளர்த்தெடுத்த அ.தி.மு.க.வை மீட்டெடுப்போம். சில வியாபாரிகளுக்கு நான் அமைச்சர் பதவி பெற்றுத்தந்தேன். ஆனால் அவர்கள் துரோகிகளாக மாறி விட்டனர்.



வருகின்ற பாராளுமன்ற தேர்தலில் பண பலத்தால் எடப்பாடி பழனிசாமி வெற்றி பெறலாம் என கனவுகாண்கிறார்.ஆனால் இதில் நாங்கள் அவருக்கு பதிலடி கொடுப்போம். மின் கட்டணம், சொத்து வரி, பால் உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்கள் விலை கடுமையாக உயர்ந்துள்ளது.

இதற்கு தேர்தலில் மக்கள்பாடம்புகட்டுவார்கள். தி.மு.க.வினர் ரூ.1000 கொடுத்து மக்களின் ஓட்டை விலைக்கு வாங்க பார்க்கின்றனர். அதற்கான பதிலை மக்கள் தேர்தலில் அளிப்பார்கள். குக்கர் சின்னத்தில் போட்டியிட்டால் மட்டுமே இயக்கத்தை மீட்டெடுக்க முடியும் என்பதால் வருகிற தேர்தலில் குக்கர் சின்னத்தில் போட்டியிட உள்ளோம்.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# தமிழக மீனவர்கள் மீது இலங்கை கடற்கொள்ளையர்கள் தாக்குதல் ஜி.கே.வாசன் கண்டனம்

சென்னை, பிப்.6

த.மா.கா. தலைவர் ஜி.கே.வாசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறி இருப்பதாவது:

தாக்கப்பட்ட தமிழக மீனவர்களின் இழப்புக்கு நிவாரணம் பெற்றுத்தரவும், சிறைப்பிடித்துச் செல்லப்பட்ட மீனவர்களை, படகுகளை மீட்கவும் மத்திய அரசு உரிய பேச்சுவார்த்தையை இலங்கை அரசிடம் மேற்கொள்ள வேண்டும். தமிழகத்தைச் சேர்ந்த நாகை மாவட்ட மீனவர்கள் மீது இலங்கையைச் சேர்ந்த கடற்கொள்ளையர்கள் தாக்குதல் நடத்தியதும், ராமேஸ்வரம் பகுதியைச் சேர்ந்த 23 மீனவர்களை இலங்கை கடற்படையினர் சிறைப் பிடித்துச் சென்றதும், படகுகளை பறிமுதல் செய்ததும் மிகவும் கண்டிக்கத்தக்கது. தமிழக அரசு, தமிழக மீனவர்களின் பாதுகாப்பான மீன்பிடித்தொழிலுக்கு உரிய பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். மத்திய மாநில அரசுகள் தமிழக மீனவர்களின் வாழ்வாதாரத்தைப் பாதுகாக்க தொடர் நடவடிக்கைகளை மேற்கொண்டு மீனவக் குடும்பங்களுக்கு உறுதுணையாக இருக்க வேண்டும்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.



# சென்னையில் பூண்டு விலை ரூ.500 ஆக உயர்வு

போரூர், பிப்.6

சமையலுக்கு தினமும் பயன்படுத்தப்படும் பூண்டு விலை தொடர்ந்து அதிகரித்து கொண்டே வருகிறது. சென்னை கோயம்பேடு மார்க்கெட்டில் உள்ளகடைகளில் ஒரு கிலோ பூண்டு ரூ.420 வரை விற்கப்படுகிறது, வெளி மார்க்கெட்டில் உள்ள கடை களில் ஒரு கிலோ பூண்டு ரூ.500க்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது. உதிரி பூண்டு ஒரு கிலோ ரூ.350க்கு விற்கப்படுகிறது. மருத்துவ குணம் கொண்ட பூண்டு இல்லாமல் ரசம் உள்பட எந்தவொரு சமையலும் செய்ய முடியாது. உற்பத்தியாளர்களிடம் இருந்து பூண்டுவை அதிகளவில் கொள்முதல் செய்து பின்னர் தட்டுப்பாடு ஏற்படும் நேரத்தில் அதை தங்களுக்கு சாதகமாக பயன்படுத்தி பூண்டுவின் விலையை நிர்ணயம் செய்து வருகின்றனர். இதன் காரணமாகவே பூண்டு விலை தொடர்ந்து அதிகரித்து வருவதாக மொத்த வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.



கடந்த ஆண்டு தொடக்கத்தில் ஒரு கிலோ பூண்டு ரூ.50க்கு மட்டுமே விற்கப்பட்ட நிலையில் தற்போது அதன் விலை 10 மடங்கு வரை அதிகரித்து உள்ளது. அத்தியாவசியப் பொருட்களான பூண்டு பதுக்கலில் ஈடுபடுபவர்கள்மீது உரிய நடவடிக்கை எடுத்து விலை உயர்வை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மொத்த வியாபாரிகள் மத்திய அரசுக்கு கோரிக்கை வைத்து உள்ளனர். மத்திய பிரதேசம், ராஜஸ்தான், குஜராத் ஆகிய மாநிலங்களில் பூண்டு உற்பத்தி அதிகளவில் நடக்கிறது. மொத்த விற்பனை கடைகளில் ஒரு கிலோ பூண்டு ரகத்தை பொறுத்து ஒரு கிலோ ரூ.350 முதல் ரூ.400 வரை விற்கப்படுகிறது. மேலும் கோயம்பேடு மார்க்கெட்டில் வெங்காயம், சின்ன வெங்காயம் மற்றும் பச்சை காய்கறிகளான பீன்ஸ், அவரைக்காய், உஜாலா கத்தரிக்காய் ஆகிய காய்கறிகளின் விலை கடும் வீழ்ச்சி அடைந்து உள்ளது. மொத்த விற்பனை கடைகளில் வெங்காயம் ஒரு கிலோ ரூ.22க்கும், சின்ன வெங்காயம் ரகத்தை பொறுத்து ஒரு கிலோ ரூ.25 முதல் ரூ.35 வரையிலும், பீன்ஸ் மற்றும் அவரைக்காய் ஆகிய காய்கறிகள் ஒரு கிலோ ரூ.25க்கும், உஜாலா கத்தரிக்காய் ஒரு கிலோ ரூ.15க்கும், விற்கப்படுகிறது. சீசன் முடிந்து வரத்து குறைந்துள்ளதால் ஊட்டி கேரட் விலை அதிகரித்து ஒரு கிலோ ரூ.65க்கும் விற்கப்படுகிறது. தொடர்ந்து ஏறுமுகமாகவே இருந்து வரும் முருங்கைக்காய் ஒரு கிலோ ரூ.120க்கும் விற்கப்பட்டு வருகிறது.

# கமல் கட்சியை சேர்ப்பது பற்றி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் முடிவு எடுப்பார் பெரியசாமி தகவல்

சென்னை, பிப்.6

சென்னை அண்ணா அறிவாலயத்தில் கூட்டணி கட்சிகளுடன் இன்று நடைபெற்ற தொகுதி பங்கீடு பேச்சுவார்த்தை முடிவடைந்ததும் அமைச்சர் ஐ. பெரியசாமிநிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர்கூறும்போது, 'முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளிநாட்டில் இருந்து திரும்பியதும், தி.மு.க. கூட்டணி தொகுதி பங்கீடு இறுதி செய்யப்பட்டுவிடும். அதற்குள் தொகுதி பங்கீடு பேச்சுவார்த்தையை முடிப்பதற்கு திட்டமிட்டுள்ளோம் என்றார்.



பின்னர் அவரிடம் கமல்ஹாசனின் மக்கள் நீதி மய்யம் கட்சியை தொகுதி பங்கீடு பேச்சுவார்த்தைக்கு அழைத்துள்ளீர்களா? அவர் கூட்டணியில் இருக்கிறாரா? என்பது பற்றி நிருபர்கள் கேள்வி எழுப்பினர். இதற்கு பதில் அளித்த அமைச்சர் ஐ.பெரியசாமி அது பற்றி முதலமைச்சர்தான் முடிவு செய்வார் என்று தெரிவித்தார்.

# மூன்றே நாளில் முடித்து வைத்த "மக்களுடன் முதல்வர்" திட்டம் விவசாயி

தஞ்சாவூர், பிப்.6

தஞ்சை மாவட்டம் கும்பகோணம் தாலுகா மாங்குடி கிராமத்தை சேர்ந்தவர் விவசாயி சந்திரசேகரன்.

இவர் அதே கிராமத்தை சேர்ந்த மாரிமுத்து என்பவரிடம் கடந்த 1988ம் ஆண்டில் 21 செண்ட் நிலத்தை கிரயம் வாங்கினார். பின்னர் இந்த நிலத்திற்கு பட்டா மாற்றம் செய்யும் நடவடிக்கையில் சந்திரசேகரன் ஈடுபட்டு வந்தார். ஆனால் 35 ஆண்டுகளாக முயன்றும் பட்டா மாற்றம் நடைபெறவில்லை. இதனால் ஒரு கட்டத்தில் இனி நம்மால் பட்டா மாற்றம் செய்யவே முடியாது என்ற விரக்தியுடன் காணப்பட்டார்.

இந்த நிலையில் தமிழ்நாடு முதலமைச்சர் மக்களின் குறைதீர்க்கும் திட்டமாக மக்களுடன் முதல்வர்என்றதிட்டத்தை செயல்படுத்தினார். ஒவ்வொரு கிராமத்திலும் அந்தந்த வட்டார தாசில்தார் தலைமையில்அ முகாம் நடத்தி மக்கள் குறைகளை கேட்டு தீர்வு காண வேண்டும் என்பதே இந்த திட்டத்தின் சிறப்பு அம்சமாகும். தமிழகம் முழுவதும் மக்களுடன் முதல்வர் திட்ட முகாம் நடைபெற்றது. இதில் லட்சக்கணக்கானோர் பயன் அடைந்தனர்.

அதன்படி மக்களுடன் முதல்வர் திட்ட முகாம் கும்பகோணம் தாசில்தார் அலுவலகத்தில் இருந்து வலையப்பேட்டை வருவாய் கிராமத்தை சேர்ந்த மாங்குடி கிராமத்திலும் நடைபெற்றது. இதனை அறிந்து சந்திரசேகரன் தனது 35 ஆண்டுக்கால எதிர்பார்ப்பான பட்டா மாற்றம் கோரி உரிய ஆவணங்களுடன் விண்ணப்பித்திருந்தார்.



அந்த விண்ணப்பத்தின் மீது அதிகாரிகள் பரிசீலித்து உடனடி நடவடிக்கை எடுத்தனர். இதையடுத்து கடந்த 2ந் தேதி சந்திரசேகரனுக்கு பட்டா மாற்றம் செய்யப்பட்டு கும்பகோணம் தாலுகா அலுவலகத்தின் இணைய சேவை மூலம் வெளியிடப்பட்டது. இந்த தகவலை இணையத்தின் மூலம் அறிந்து விவசாயி சந்திரசேகரன் அளவில்லா மகிழ்ச்சி அடைந்தார்.

அதாவது முகாமில் வழங்கிய விண்ணப்பம் மீது அடுத்த 3 நாட்களுக்குள் நடவடிக்கை எடுத்து முடித்து வைக்கபட்டுள்ளது.

35 ஆண்டுக்கால பிரச்சினையை வெறும் மூன்றே நாளில் மக்களுடன் முதல்வர் திட்டத்தின் மூலம் தீர்வு கண்டு முடித்து வைக்கப்பட்டுள்ளதை எண்ணி அவர் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை.

இதனால் அவர் மக்களுடன் முதல்வர் திட்டத்தின் சிறப்புகள், பயன்கள் குறித்து மற்ற விவசாயிகளுக்கு எடுத்து கூறி வருகிறார். மேலும் மக்களுடன் முதல்வர் திட்டம் அனைவருக்கும் ஒரு வரப்பிரசாதம் என்று பெருமிதத்துடன் கூறி வருகிறார்.

# பா.ஜனதா கூட்டணியில் தான் இருக்கிறோம்: ஓ.பன்னீர்செல்வம்

நாகர்கோவில், பிப்.6

நாகர்கோவிலில் இன்று முன்னாள் முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:

அ.தி.மு.க.வை எம்.ஜி.ஆர். உருவாக்கிய போது அ.தி.மு.க.வின் அடிப்படை உறுப்பினராக இருக்கும் எவர் வேண்டுமானாலும் பொதுச்செயலாளர் ஆகலாம் என்று விதியை உருவாக்கி இருந்தார்.

பொதுச்செயலாளரை உறுப்பினர்கள் தான் தேர்வு செய்ய வேண்டும் என்ற அந்த நிபந்தனையை எடப்பாடி பழனிசாமி மாற்றி 10 மாவட்ட செயலாளர்கள் முன்மொழிய வேண்டும். 10 மாவட்ட செயலாளர்கள் வழிமொழிய வேண்டும். 5 பொதுக்குழு உறுப்பினர்கள் ஆதரவளிக்க வேண்டும் என்று மாற்றினார்.

அப்படி என்றால் பணம் படைத்தவர்களால் மட்டும் தான் பொது செயலாளராக முடியும்.

இந்த நிலையை மாற்ற வேண்டும் என்பதற்காக தான் தர்ம யுத்தம் நடத்தி வருகிறோம். அதற்காக தான் இந்த உரிமை மீட்பு கூட்டமும் நடைபெறுகிறது.

அண்ணா நினைவு நாளன்று சசிகலாவை சந்தித்தோம். மரியாதை நிமித்தமாக தான் சந்தித்தேன். அரசியல் பற்றி பேசவில்லை.

பிரதமர் மோடி 2 முறை பிரதமராக வந்துள்ளார். அவரை 3வது முறையும் பிரதமராக்க வேண்டும் என்று அந்த கூட்டணியில் உள்ளோம். அ.தி.மு.க.வின் பெயருக்கு பங்கம் விளைவிக்கும் யாராக இருந்தாலும், எந்த பதவியில் இருந்தாலும் அதை எதிர்த்து தர்ம யுத்தம் நடத்தப்படும்.

இவ்வாறு அவர் கூறினார்.

# விஜய் கட்சியின் கொள்கைகளை ஏற்று இளைஞர்கள் சென்றால் மகிழ்ச்சியே: சீமான்

சென்னை, பிப்.6

நாம் தமிழர் ஒருங்கிணைப்பாளர் சீமான் நிருபர்களிடம் கூறியதாவது:

நடிகர் விஜய் தொடங்கி உள்ள கட்சி பெயரில், திராவிடம் என்பது இடம் பெறவில்லை. எனவே இந்த திராவிட கருத்தியலை, அவருக்கு முன்பாக நாம் தமிழர் கட்சி, தமிழரசு கட்சி எதிர்த்து வருகிறது.

திராவிடம் என்பது தேவைப்படாது, அதனை கடந்து தமிழ் சமூகம் வந்து விட்டது. திராவிடம் என்று அரசியல் செய்ய முடியாது. திராவிட அரசியல் வீழ்ச்சி அடைந்து வருகிறது.

அதிகளவில் இளைஞர்கள் நாம் தமிழர் கட்சி நோக்கி வந்து கொண்டிருக்கின்றனர். இதற்கு விஜய் தொடங்கிய தமிழக வெற்றி கழகம் தடையாக இருக்காது. அவர் வைக்கக்கூடிய தத்துவத்தால் ஈர்க்கப்பட்டு இளைஞர்கள் அங்கு சென்றால் மகிழ்ச்சி.



நான் வைக்கும் தத்துவம் ஈர்த்து நாம் தமிழர் கட்சிக்கு வந்தாலும் மகிழ்ச்சியே. விஜய்யின் ரசிகர்கள் அதிகளவில் நாம் தமிழர் கட்சியில் உள்ளனர். நான் விஜய்யின் ரசிகனாக இருப்பேன். ஆனால் நாம் தமிழருக்குதான் வாக்களிப்பேன் என்று சொல்லி வருகின்றனர். இதில் எந்த குழப்பமும் இல்லை.

தமிழக காவல்துறை செய்ய வேண்டிய வேலையை என்.ஐ.ஏ. செய்திருக்கிறார்கள் என்று எச்.ராஜா சொல்லி இருப்பது தேர்தல் நேரத்து விளையாட்டு. நாம் தமிழர் கட்சியினர் மீது வைக்கப்பட்டு உள்ள குற்றச்சாட்டில் உண்மை இல்லை என்பது என்.ஐ.ஏ.விற்கு தெரியும். இவ்வளவு நாட்கள் அமைதி காத்து விட்டு, தேர்தலுக்கு ஒரு மாதத்திற்கு முன்பு விசாரணை எதற்காக என்பதும் அனைவருக்கும் தெரியும்.

இந்த என்.ஐ.ஏ. சோதனைமூலம், தி.மு.க. பரப்பிவந்த, பா.ஜ.க.வின் பி டீம் நாம் தமிழர் என்ற கூற்று பொய்யாகி உள்ளது.

தற்போது தமிழகத்தில் பா.ஜனதா பூஜ்யமாக உள்ளது என்று தமிழக முதலமைச்சர் ஸ்டாலின் கூறுகிறார். இதனை நாங்கள் முன்பிருந்தே சொல்லி வருகிறோம். ஆனால் தி.மு.க.தான் மக்களை பயமுறுத்தியது. சீமானுக்கு வாக்களித்தால் பா.ஜ.க.வுக்கு சென்று விடும் என்று முதல்வர் கூறி வந்தார். இப்போது அவரே கூறுகிறார் பா.ஜனதா பூஜ்யம் என்று.

இவ்வாறு அவர் கூறினார்.

# பம்பரம் சின்னத்தில் போட்டியிடுவோம்: ம.தி.மு.க. குழுவினர் பேட்டி

சென்னை, பிப்.6

தி.மு.க.வுடன் நடந்த பேச்சுவார்த்தைக்கு பிறகு ம.தி.மு.க. குழுவில் இடம் பெற்றிருந்த ஆடிட்டர் அர்ஜூன்ராஜ் நிருபர்களிடம் கூறியதாவது:

ம.தி.மு.க.வுக்கும் தி.மு.க.வுக்கும் இடையே தொகுதி உடன்பாடு பேச்சுவார்த்தை சுமூகமாக நடைபெற்றது. நாங்கள் இரண்டு பாராளுமன்ற தொகுதிகளையும், ஒரு ராஜ்யசபா தொகுதியையும் கேட்டுள்ளோம்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளிநாடு சென்று உள்ளதால் அவர் பயணம் முடித்து வந்ததும் அதுபற்றி முடிவெடுத்து அறிவிப்பார்.



கேள்வி: எந்தெந்த தொகுதி என்று பட்டியல் கொடுத்து விட்டீர்களா?

பதில்: தொகுதிகள் எது எது என்பதை இனிமேல் முடிவு செய்வோம்.

கேள்வி: கடந்த முறை போட்டியிட்ட அதே தொகுதியை கேட்கிறீர்களா? அல்லது வேறு தொகுதியா?

பதில்: அதுபற்றி இன்னும் முடிவு செய்யவில்லை.

தலைமைக் கழகம்தான் முடிவு செய்யும். அது எந்தெந்த தொகுதி என்பதை பின்னர் சொல்வோம்.

கேள்வி: கடந்த முறை உதய சூரியன் சின்னத்தில் போட்டியிட்டீர்கள்? இந்த முறை சொந்த சின்னத்தில் போட்டியிட கேட்டிருக்கிறீர்களா?

பதில்: இந்த முறை கண்டிப்பாக எங்களது கட்சி சின்னத்தில்தான் போட்டியிடுவோம்.

கேள்வி: அதற்கான உத்தரவாதம் கொடுத்திருக்கிறார்களா? பேச்சுவார்த்தையில் அதுபற்றி பேசப்பட்டதா?

பதில்: எங்களுடைய கோரிக்கையை வைத்து உள்ளோம். அது பின்னாடி தெரியும். தனி சின்னத்தில் எங்களது கட்சி சின்னத்தில் தான் நாங்கள் நிற்க வேண்டும் என்பது எங்களது கட்சியின் நிலைப்பாடு.

கேள்வி: அடுத்து எப்போது பேச்சுவார்த்தைக்கு வருவீர்கள்?

பதில்: முதலமைச்சர் வந்த பிறகு அடுத்தகட்ட பேச்சுவார்த்தை நடைபெறும்.

கேள்வி: அடுத்தகட்ட பேச்சுவார்த்தைக்குவைகோ வருவாரா?

பதில்: அதுபற்றி அப்போது தெரிய வரும்.

இவ்வாறு அவர் கூறினார்.

தி.மு.க. கூட்டணியில் கடந்த முறை ஈரோடு தொகுதியும், ஒரு ராஜ்யசபா சீட்டும் ம.தி.மு.க.வுக்கு வழங்கப்பட்டது. இந்த முறை 2 தொகுதிகளில் போட்டியிட ம.தி.மு.க. விரும்புகிறது. அதுவும் ம.தி.மு.க.வின் சொந்த சின்னத்தில் போட்டியிட நினைக்கிறது.

இதற்காக விருதுநகர், திருச்சி, ஈரோடு, காஞ்சிபுரம், கடலூர், மயிலாடுதுறை ஆகிய 6 தொகுதிகளைவிருப்பப்பட்டியலாக தி.மு.க.விடம் வழங்கி உள்ளது.

# உணவைத் தேடி வாகனங்களை வழி மறிக்கும் காட்டு யானை கூட்டங்களால் பரபரப்பு

தாளவாடி, பிப்.6

ஈரோடு மாவட்டம் சத்தியமங்கலம் புலிகள் காப்பகத்தில் மொத்தம் 10 வனச்சரகங்கள் உள்ளன. இந்த வனச்சரகத்தில் யானை, சிறுத்தை, புலி, காட்டெருமை, கரடி உட்பட ஏராளமான வனவிலங்குகள் வசித்து வருகின்றன.

இதில் யானை கூட்டங்கள் அவ்வப்போது வனப்பகுதியை விட்டு வெளியேறி சாலையில் உலா வருவது தொடர்கதையாகி வருகிறது.



தற்போது வனப்பகுதியில் கடும் வறட்சி நிலவுவதால் கடந்த சில நாட்களாக வனப்பகுதியை விட்டு வெளியேறும் காட்டு யானைகள் கூட்டம் சாலையில் உலா வருவதும், வாகனங்களை வழி மறிப்பதும் தொடர்கதையாகி வருகிறது. குறிப்பாக சரக்கு வாகனங்களை வழிமறித்து சாப்பிட உணவு உள்ளதா என்று தேடி பார்த்து வருகிறது. இந்த பகுதி வழியாக நூற்றுக்கணக்கான கரும்பு லோடுகளை ஏற்றி செல்லும் வாகனங்களை வழிமறித்து கரும்புகளையும் சாப்பிட்டு வருகிறது.

யானைகள் உணவு, தண்ணீர்தேடி வனச்சாலையை கடந்து செல்வது வழக்கமான ஒன்று. இந்த நிலையில் ஆசனூரில் இருந்து கேர்மாளம் செல்லும் வனச்சாலையில் வனப்பகுதியை விட்டு வெளியேறிய 3 யானைகள் வனச்சாலையில் உலா வந்தது. அவ்வழியாக சென்ற அனைத்து வாகனங்களையும் வழிமறித்து உணவு உள்ளதா என்று தேடி பார்த்தது.

இதைகண்ட வாகன ஓட்டிகள் வாகனங்களை பின்னோக்கி ஓட்டினர். சிறிது நேரம் சாலையில் உலா வந்த யானைகள் பின்னர் மீண்டும் வனப்பகுதிக்குள் சென்றது.

இது குறித்து வனத்துறையினர் கூறும்போது,

தற்போது தாளவாடி வனப்பகுதியில் வறட்சி நிலவுவதால் காட்டு யானைகள் கூட்டம் வனப்பகுதியை விட்டு வெளியேறி சாலையில் உலா வருகிறது. கடந்த 10 நாட்களில் மட்டும் ஏராளமான காட்டு யானைகள் சாலையில் உலா வந்து சரக்கு வாகனங்களை வழிமறித்து உணவு இருக்கிறதா என்று தேடி பார்க்கிறது.

எனவே வாகன ஓட்டிகள் இந்த பகுதியில் செல்லும் போது கவனத்துடன் செல்ல வேண்டும்.

சிலர்ஆர்வம்மிகுதியால் தங்களது வாகனத்தை விட்டு கீழே இறங்கி யானைகளை செல்போனில் படம் எடுக்கின்றனர். இது பெரும் ஆபத்தில் முடியும். வாகன ஓட்டிகள் வாகனங்களை வனப்பகுதியில் நிறுத்த வேண்டாம். மீறி செயல்படுபவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றனர்.

# முன்னாள் மாணவர் சந்திப்பு: நிகழ்ச்சிக்கு பள்ளி சீருடையில் வந்த 54 வயது நபர்

கோவை, பிப்.6

கோவை வின்சென்ட் ரோடு, கோட்டைமேடு பகுதியிலுள்ள நல்லஆயன் உயர்நிலைப்பள்ளியில் 1980ம் ஆண்டு முதல் 10ம் வகுப்புவரை படித்த முன்னாள் மாணவர் சந்திப்பு நிகழ்ச்சி, போத்தனூர் திருமண மண்டபத்தில் நடைபெற்றது.

இதில் சுமார் 50க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

முன்னாள் மாணவர்கள் சந்திப்பில் சுமார் 40 ஆண்டுகளுக்கு பிறகு ஒன்று கூடிய பழைய மாணவர்கள் மீண்டும் ஒன்றுசேர்ந்தது, பலரது முகத்திலும் நெகிழ்ச்சி, மகிழ்ச்சி, பூரிப்பை ஏற்படுத்தியது.

மேலும் அவர்கள் தங்களுக்கான அடையாளம், நட்பு, பாசத்தை ஒருவருக்கொருவர் புதுப்பித்துக் கொண்டனர். தொடர்ந்து அவர்கள்பள்ளி காலத்தில் நடைபெற்ற பசுமையான நினைவுகளை சிலாகிப்புடன் அசை போட்டனர்.

மேலும் முன்னாள் மாணவர் சந்திப்புக்காக இதே பள்ளியில் கடந்த 1990ம் ஆண்டு படித்த ஆர்.எஸ். புரத்தை சேர்ந்த கார்த்தி (வயது 54) என்பவர், கடந்த கால நினைவுகளை நினைவு கூறும் விதமாக, அன்றைய காலகட்டத்தில் நடைமுறையில் இருந்த காக்கி அரைக்கால் டவுசர் மற்றும் வெள்ளைநிற சட்டை அணிந்து பள்ளிக்கு வந்திருந்தார்.

இது அங்கு திரண்டு இருந்த பழைய நண்பர்கள்அனைவரையும் வெகுவாக கவர்ந்தது. கார்த்தி கூடலூர் பகுதியில் உள்ள



கோவிலில் தலைமை குருக்களாக பணியாற்றி வருகிறார்.

முன்னாள் மாணவர்கள் சந்திப்பில் பங்கேற்ற பள்ளி ஆசிரியர்கள் மிகவும் நெகிழ்ச்சியோடு பழையநினைவலைகளை மேடையில் பகிர்ந்து கொண்டனர்.

பின்னர் அவர்கள் பேசுகையில்,

இன்றைய தலைமுறை மாணவர்கள் இந்த நாட்டிற்காக தான் கற்ற கல்வியை பிறர் பயன்பட நடந்து கொள்ள வேண்டும் என்று உணர்வு பூர்வமாக பேசி, முன்னாள் மாணவர்களுக்கு பாராட்டு தெரிவித்தனர்.

இந்த விழாவில் பள்ளி தலைமை ஆசிரியர் பிளமின் மரியஜோசப் உட்பட ஆசிரியர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# ராமேசுவரம் மீனவர்கள் 23 பேர் 2 விசைப்படகுகளுடன் சிறைபிடிப்பு: மீனவர் சங்கங்கள் கண்டனம்

ராமேசுவரம்: ப்ப்.6

தமிழக மீனவர்கள் எல்லை தாண்டி மீன்பிடிப்பதாக கூறி இலங்கை கடற்படையினர் அவர்களை சிறைப்பிடிப்பதும், விசைப்படகுகளை இலங்கைக்கு கொண்டு நாட்டுடமை ஆக்குவதும் தொடர்கதையாகி வருகிறது. ஒருசில சமயங்களில் மீனவர்களை விரட்டி அடிப்பதும், அவர்கள் காயங்களுடன் கரைதிரும்புவதும் வாடிக்கையாகி விட்டது.

நேற்று முன்தினம் கூட ராமேசுவரம் மீனவர்களை தாக்கிய இலங்கை கடற்படையினர் துரத்தி அடித்தனர். இந்நிலையில் இன்று ஒரே நாளில் ராமேசுவரம் மீனவர்கள் 23 பேரை இலங்கை கடற்படையினர் சிறைப்பிடித்து சென்றுள்ளனர். அது பற்றிய விபரம் வருமாறு:

ராமநாதபுரம் மாவட்டம், ராமேசுவரத்தில் இருந்து நேற்று காலை 492 விசைப் படகுகளில் 3,500க்கும் மேற்பட்ட மீனவர்கள் மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை அனுமதி பெற்று கட லுக்கு மீன்பிடிக்க சென்றனர். நள்ளிரவு கச்சத்தீவு மற்றும் நெடுந்தீவுக்கு இடையே வலைகளை விரித்து மீன் பிடித்துக் கொண்டிருந்தனர்.



அப்போது 5 ரோந்து கப்பலில் வந்த இலங்கை கடற்படையினர் ராமேசுவரம் மீனவர்களின் படகுகளை சுற்றி வளைத்தனர். இதனால் அதிர்ச்சி அடைந்த மீனவர்கள் அங்கிருந்து தப்ப முயன்றனர். ஆனால் மீனவர்கள் மீது தாக்குதல் நடத்திய இலங்கை கடற்படையினர்அவர்களைமீன்பிடிக்க விடாமல் விரட்டியடித்தனர். இதில், தங்கச்சிமடத்தை சேர்ந்த ஜேம்சன், சகாயராஜ் ஆகியவர்களின் இரண்டு விசைப் படகை சிறைபிடித்தனர்.

இதில், ஜேம்சன் படகில் இருந்த மீனவர்கள் வெக்கர் (27), மார்ட்டின் (27), மணி, சிதம்பரம் (47), ஆரோன், சதீஷ், சுபாஷ் சந்திரபோஷ், சுதாகர், ஜெரால்டு, சுமுல், ஆக்கு மற்றும் சகாயராஜ் படகில் இருந்த படகில் இருந்த ராபர்ட் (40), ஜாக்ஷஷன் (44), சாமுவேல் (24), மெல்சன் (24), லெனின்(45), கேவா(40), ரஞ்சித் (42), அசோந்த் (19), லவ்சன் (40), லிஸ்டன் (30), இளங்கோ (50) ஆகிய 23 மீனவர்களை கைது செய்து காங்கேசம் துறைமுகத்திற்கு அழைத்து சென்றனர்.

கடற்படை அதிகாரிகள் விசாரணைக்கு பின் எல்லை தாண்டி மீன்பிடித்ததாக கூறி இரண்டு விசைப்படகுகளையும் பறிமுதல் செய்தனர். மேலும் மீனவர்கள் 23 பேரையும் நீரியல்துறை அதிகாரிகளிடம் ஒப்படைத்தனர். மீனவர்கள் மீது வழக்கு பதிவு செய்து நீதி மன்றத்தில் ஆஜர்படுத்தி சிறையில் அடைக்க உள்ளதாக இலங்கை அதிகாரிகள் தெரிவித்தனர்.

இலங்கையில் இன்று 76வது சுதந்திர தினம் கொண்டாடப்பட உள்ள நிலையில் கைதான மீனவர்கள் குறித்த விசாரணை தாமதமாகும் என்று கூறப்படுகிறது. இன்று ஒரே நாளில் 23 மீனவர்கள் மற்றும் 2 விசைப்படகுகளை சிறைபிடித்து இலங்கை கடற்படைக்கு ராமேசுவரம் மீனவ சங்கம் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர். மேலும் படகுகள் மற்றும் மீனவர்களை மீட்க மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# விதைக்கவில்லை நடவு செய்யவில்லை... ஏக்கருக்கு 8 மூட்டை நெல் விளைச்சல்... இன்ப அதிர்ச்சியில் விவசாயி

பட்டுக்கோட்டை, பிப்.6

தஞ்சாவூர் மாவட்டம் பட்டுக்கோட்டை அருகே உள்ள ஆம்பலாப்பட்டு தெற்கு கிராமத்தைச் சேர்ந்த விவசாயி ஜெயராஜ் (வயது 52). இவருக்கு சொந்தமான 2 ஏக்கர் நிலத்தில் கடந்த 6 மாதங்களுக்கு முன்பு நெல் பயிரிட்டு, ரூ.50 ஆயிரம் செலவு செய்தார். ஆனால் போதுமான நெல் விளைச்சல் இல்லாமல் செலவு செய்த தொகை கூட கிடைக்காமல் நஷ்டம் அடைந்தார்.



இதனால் மனவேதனை அடைந்த அவர் இந்த முறை நெல் சாகுபடி செய்யாமல் விவசாய நிலத்தை அப்படியே தரிசாக விட்டு விட்டார். அதன் பிறகு ஜெயராஜ் தனது வயலுக்கு செல்லாமல் இருந்தார்.

இந்நிலையில் கடந்த சில தினங்களுக்கு முன்பு அப்பகுதியை சேர்ந்த பொதுமக்கள், ஜெயராஜிடம் உங்கள் வயலில் நெல் கதிர்விட்டு பயிர்கள்தலை சாய்ந்துள்ளது. இன்னும் ஏன் கதிரை அறுக்காமல் வைத்துள்ளீர்கள் என்று கேட்டுள்ளனர்.

அதைக்கேட்டு அதிர்ச்சியடைந்த ஜெயராஜ், கடந்த சில மாதங்களாக வயலுக்கு செல்லாமல் இருந்து மீண்டும் வயலை பார்க்கச் சென்றபோது அங்கு நெல் கதிர் வளர்ந்து முற்றி பயிர்கள் தலை சாய்ந்துள்ளது கண்டு இன்ப அதிர்ச்சியில் உறைந்தார்.

இதுபற்றி ஜெயராஜ் கூறுகையில், கடந்த முறை நெல் விவசாயம் செய்து நஷ்டம் அடைந்த நிலையில் அதற்குப்பின் நெல் விவசாயத்தையே மறந்து விட்டு தான் வேறு தொழிலை பார்க்க சென்று விட்டேன். இந்த நிலையில் என்னுடைய வயலில் கதிர் விட்டு நெல் பயிர்கள் தலை சாய்ந்து கிடக்கிறது என்று தகவல் தெரிந்து வயலுக்கு சென்று பார்த்த போது எனக்கே இது ஆச்சரியமாக இருந்தது.

நான் நெல் விதை விதைக்கவில்லை, நடவு நடவில்லை, தண்ணீர் பாய்ச்சவில்லை, உரம் வைக்கவில்லை ஆனால் ஒரு ஏக்கருக்கு 8 மூட்டை வீதம் 16 மூட்டை நெல் விளைந்திருக்கிறது. இது என்னை மட்டுமல்ல இப்பகுதியில்உள்ளஅனைத்து விவசாயிகளையும் ஆச்சரியப்பட வைத்துள்ளது. கடந்த முறை நெல்கதிர் அறுத்து விட்டு, வயலை சுத்தம் செய்யாமல் விட்டு விட்டேன்.

இந்நிலையில் கதிர் அறுத்த பிறகு இருந்த அடியில் உள்ள அருப்பு தாழிலிருந்து பயிர் வளர்ந்து அதன் மூலம் நெல் விளைந்துள்ளது என்னைப்போன்ற விவசாயிகளுக்கு ஆச்சரியமாக உள்ளது. ஆயிரக்கணக்கில் செலவு செய்து பயிரிட்டபோது கிடைக்காத நெல் விளைச்சல் ஒரு பைசா கூட செலவு செய்யாமல் தற்போது ஒரு ஏக்கருக்கு 8 மூட்டை விளைந்திருப்பது மிகப்பெரிய சந்தோசமாக உள்ளது என்றார்.

# பப்ஜி விளையாடியதை தாய் கண்டித்ததால் மாணவர் தற்கொலை

சென்னை, பிப்.6

சென்னை கோடம்பாக்கத்தில் பி.காம். முதலாம் ஆண்டு படித்து வரும் மாணவர், தினமும் நண்பர்களுடன் சேர்ந்து பப்ஜி கேம் விளையாடி வந்துள்ளார்.

நீண்ட நேரம் பப்ஜி கேம் விளையாடியதை அவரது தாய் கண்டித்ததாக கூறப்படுகிறது. மனமுடைந்த மாணவர் வீட்டில் யாரும் இல்லாத நேரத்தில் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டார்.

இந்த தற்கொலை சம்பவம் தொடர்பாக வடபழனி போலீசார் வழக்கு பதிவு



செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

பப்ஜி கேம் விளையாடிய கல்லூரி மாணவரை தாய் கண்டித்ததால் தற்கொலை செய்து கொண்ட சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# பா.ஜ.க. பொதுக்கூட்டம் தமிழக அரசியலில் மிகப்பெரிய மாற்றத்தை ஏற்படுத்தும்

திருப்பூர், பிப்.6

பா.ஜ.க. மாநில தலைவர் அண்ணாமலை 'என் மண்,என் மக்கள்' பாத யாத்திரைநிறைவு விழாபொதுக் கூட்டம் திருப்பூர் மாவட்டம் பல்லடத்தில் வருகிற 25ந்தேதி நடக்கிறது. இதில் பிரதமர்நரேந்திரமோடி பங்கேற்று பேச உள்ளார். இது குறித்து பா.ஜ.க., மாநில பொது செயலாளர் முருகானந்தம் திருப்பூரில் நிருபர்களிடம் கூறியதாவது:

இந்தியாவின் 2வது இரும்பு மனிதராக உள்ள அத்வானிக்கு பாரத ரத்னா விருது அறிவிக்கப்பட்டது மகிழ்ச்சி அளிக்கிறது. மாநில பா.ஜ.க., தலைவர் அண்ணாமலையின் பாத யாத்திரை இதுவரை 180 தொகுதிகளில் முடிந்துள்ளது. மீதமுள்ள 54 தொகுதிகளையும், பல்லடத்தில் நடக்கும் நிறைவு விழாவுக்குள் முடிக்க திட்டமிட்டுள்ளோம். யாத்திரைக்கு மக்களிடத்தில் குறிப்பாக பெண்கள் மத்தியில் நல்ல வரவேற்பு கிடைத்துள்ளது.

நிறைவு விழா பிரமாண்டமாக வருகிற 25ந்தேதி பல்லடத்தில் நடக்கிறது. கட்சியினர் 10 லட்சம் பேர், பொதுமக்கள் 3 லட்சம் பேர் என 13 லட்சம் பேர் கலந்து கொள்ள இலக்கு வைக்கப்பட்டுள்ளது.

இந்த பொதுக்கூட்டம் தமிழகத்தில் மிகப்பெரிய அரசியல் மாற்றத்தை ஏற்படுத்தும். 400 ஏக்கர் பரப்பளவில் கூட்டம் நடைபெற உள்ளது. வாகனங்களை நிறுத்த 600 ஏக்கர் மற்றும் மக்கள் வந்து செல்வதற்காக 300 ஏக்கர் என ஆயிரத்து 300 ஏக்கர் தேர்வு செய்யப்பட்டு வேலைகள் நடந்து வருகிறது. தமிழகம் மட்டுமல்ல... இந்தியாவே திரும்பி பார்க்கும் வகையில் இந்த யாத்திரையின் நிறைவு பொதுக்கூட்டம் இருக்கும் என நினைக்கிறோம். 25ந்தேதி பிற்பகலுக்கு மேல் நடைபெறும் பொதுக்கூட்டத்தில் பிரதமர் மோடி மற்றும் பா.ஜ.க.தேசிய தலைவர்கள் பங்கேற்று பேச உள்ளனர். பொதுக்கூட்டத்துக்கு முன்னதாக திருப்பூரில் வருகிற 24ந் தேதி யாத்திரை நடத்த திட்டமிட்டுள்ளோம். திருப்பூர் மாநகராட்சியில் இருந்து தொடங்கி, புதிய பேருந்து நிலையம் வரை யாத்திரை நடைபெறும். பிரதமர் மோடியை பொறுத்தவரை நெருக்கமான மாநிலம், மிகவும் பிடித்த மாநிலம் தமிழகம். நேரடியாக ஆளும்கட்சியை கேள்வி கேட்கும் முதன்மை கட்சியாக பா.ஜ.க., உள்ளது. புள்ளி விபரத்துடன் அண்ணாமலை குற்றச்சாட்டுகளை முன்வைக்கிறார்.

தி.மு.க., தேர்தல் வாக்குறுதியில் சொல்லி இருப்பதில், 100 சதவீதம் பொய் தான். குளறுபடிகளின் ஒட்டுமொத்த அம்சமாக தி.மு.க., உள்ளது. தமிழகத்தில் சட்டம்ஒழுங்கு சீர் கெட்டு உள்ளது. சேவை செய்யக்கூடிய நபர்கள் யாராக இருந்தாலும் அரசியலுக்கு வரலாம். விஜய் அரசியல் வருகை வரவேற்கத்தக்கது. எங்களின் சித்தாந்தாம் வேறு. இது ஒரு இயக்கம். இங்கு யாரும் நிரந்தர தலைவர் கிடையாது. லட்சியமே பிரதானம். அரசியல் நகர்வு அண்ணாமலையை நோக்கி தான் செல்கின்றது.

இவ்வாறு அவர் கூறினார்.

# கவர்னர் திடீர் டெல்லி பயணம்: மத்திய மந்திரி அமித்ஷாவை சந்திக்க வாய்ப்பு

சென்னை, பிப்.6

தமிழ்நாடு சட்டசபை கூட்டத்தொடர் பிப்ரவரி 12ந்தேதி தொடங்கும் நிலையில் தமிழ்நாடு கவர்னர் ஆர்.என்.ரவி இன்று திடீரென டெல்லி சென்றுள்ளார்.

தமிழ்நாட்டில் ஆளும் தி.மு.க. அரசுடன் கவர்னர் ஆர்.என்.ரவி தொடர்ந்து மோதல் போக்கையே கடைபிடித்து வருகிறார். தமிழ்நாடு சட்டசபையில் நிறைவேற்றப்பட்ட மசோதாக்களுக்கு ஒப்புதல் தராமல் நிறுத்தி வைப்பது, திருப்பி அனுப்புவது உள்ளிட்டவைகளால் கவர்னர் ஆர்.என்.ரவிக்கு எதிராக தமிழ்நாடு அரசு சுப்ரீம் கோர்ட்டில் வழக்கு தொடர்ந்தது.

அதன் பிறகு சுப்ரீம் கோர்ட்டு அறிவுறுத்தலின் பேரில் கவர்னரும் முதலமைச்சரும் நேரடியாக அமர்ந்து பேசினார்கள். ஆனாலும் இதன் விவரம் வெளியிடப்படவில்லை.

அதே நேரத்தில் தமிழ்நாட்டில் சர்ச்சைக்குரிய வகையில் கருத்துகளை





ஆளுநர் ரவி தொடர்ந்து தெரிவித்து வருகிறார்.

தற்போது தமிழ்நாடு சட்டசபை பட்ஜெட் கூட்டத்தொடர் வரும் 12ந் தேதி தொடங்க உள்ளது. ஆண்டின் முதல் கூட்டம் என்பதால் சட்டசபையில் கவர்னர் ஆர்.என்.ரவி உரை நிகழ்த்த உள்ளார்.

கடந்த ஆண்டு கவர்னர் உரையில் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, காமராஜர், திராவிட மாடல் ஆகியவற்றை தவிர்த்துவிட்டு கவர்னர் ரவி உரையாற்றினார். அத்துடன் அவராகவே சில வற்றையும் கவர்னர் உரையில் சேர்த்து வாசித்தார்.

இதனால் தமிழ்நாடு சட்டசபையில் அரசின் உரை மட்டுமே இடம் பெறும். கவர்னர் தன்னிச்சையாக வாசித்த உரை இடம்பெறாது என முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் தீர்மானத்தை வாசித்தார். உடனே சட்ட சபையில் இருந்து கவர்னர் ஆர்.என். ரவி வெளிநடப்பு செய்தது பெரும் சர்ச்சையானது.

அண்மையில் கேரளா சட்டசபையில் கவர்னர் முகமது ஆரிப் கான், மாநில அரசின் உரையை முழுமையாக வாசிக்காமல் 1.15 நிமிடம் மட்டுமே வாசித்து விட்டு வெளியேறியதும் பெரும் சர்ச்சையானது. இப்பின்னணியில் தமிழ்நாடு சட்டசபை வரும் 12ந் தேதி கூடுகிறது. பிப்ரவரி 19ந் தேதி தமிழ்நாடு பட்ஜெட்டை நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு தாக்கல் செய்கிறார்.

நடப்பாண்டின் முதல் கூட்டம் என்பதால் கவர்னர் உரை இடம்பெற உள்ளது. இம்முறை கவர்னர் ரவி என்ன மாதிரியான நிலைப்பாடு எடுக்கப் போகிறார்? என்பது எதிர்பார்ப்பாக இருந்து வருகிறது.

இச்சூழலில் இன்று திடீரென கவர்னர் ஆர்.என். ரவி டெல்லி சென்றுள்ளார். டெல்லிக்கு 3 நாட்கள் பயணமாக செல்லும் கவர்னர் ரவி, மத்திய உள்துறை மந்திரி அமித்ஷாவை சந்தித்து பேசுகிறார். இச்சந்திப்பின்போது தமிழ்நாடு நிலவரம் குறித்து கவர்னர் ரவி ஆலோசனை நடத்துவார் என கூறப்படுகிறது.

# மீன்கள் வாங்க குவிந்த பொதுமக்கள்

கடலூர், பிப்.6

கடலூர் தேவனாம் பட்டினம், தாழங்குடா, அக்கரைகோரி உள்ளிட்ட பல் வேறு மீனவர் கிராமங்களில் இருந்து தினந்தோறும் ஏராளமான மீனவர்கள் தங்கள் விசை மற்றும் பைபர் படகுகளில் மீன் பிடிக்க சென்று வருகின்றனர்.


இதன் காரணமாக கடலூர் துறைமுகத்தில் அதிகாலை முதல் மீன் விற்பனை தொடங்கி பரபரப்பாக காணப்பட்டு வரும்.

இங்கு உள்ளூர் மற்றும் வெளியூர் வியா பாரிகள் வந்து மீன்களை வாங்கி செல்வது வழக்கம். குறிப்பாக ஞாயிற்றுக் கிழமைகளில் கடலூர் துறைமுகத்தில் மீன்கள் வாங்க பொதுமக்கள் கூட்டம் அலைமோதி காணப்படும். அதன்படி துறைமுகத்தில் மீன் விற்பனை தொடங்கியது.

வழக்கமாக 250 ரூபாய்க்கு விற்கப்படும் சங்கரா மீன் இன்று 450 ரூபாய்க்கும், சீலா மீன் 400 ரூபாய்க்கும், பாறை மீன் 450 ரூபாய் முதல் 500 ரூபாய் வரைக்கும், வஞ்சிரம் மீன் 800 ரூபாய்க்கும், 100 ரூபாய்க்கு விற்கப்படும் கானாங்கத்தை கிலோ 200 ரூபாய்க்கும், 150 முதல் 200 ரூபாய் வரை விற்கப்படும் நெத்திலி மீன் 300 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்பட்டது.

மீன் விலை அதிகரித்து காணப்பட்டாலும் விலையை பொருட்படுத்தாமல் வியாபாரிகளும், பொதுமக்களும் தங்களுக்கு தேவையான மீன்களை வாங்கி சென்றனர்.

நமது தின கனி
Title-Code:-TNTAM24615
R.Dis No:- 968/2023
6.2.2024



# ராக்கி திரைப்பட புகழ் கார்ல் வெதர்ஸ் காலமானார்

1976ல் ஹாலிவுட்டின் ஹீரோ சில்வெஸ்டர் ஸ்டாலோன் கதாநாயகனாக நடித்து வெளிவந்த திரைப்படம், ராக்கி (Rocky).

ஸ்டாலோனை புகழேணியின் உச்சாணிக் கொம்பில் நிறுத்திய இத்திரைப்படத்தில், அப்போல்லோ க்ரீட் எனும் பிரபல ஹெவிவெயிட் குத்துச்சண்டை வீரரை, ராக்கி பல்போவா எனும் உள்ளூர் வீரர் போட்டியிட்டு வெல்வார். இதில் ராக்கி பல்போவா கதாபாத்திரத்தில் சில்வெஸ்டர் ஸ்டாலோன் நடித்திருந்தார். அப்போல்லோ க்ரீட் கதாபாத்திரத்தில் கார்ல் வெதர்ஸ் (CarlWeathers)எனும்அமெரிக்கதொழில்முறைகால்பந்து வீரர் சிறப்பாக நடித்திருந்தார். ராக்கி திரைப்பட நடிகர்களுக்கான தேர்வின் போது (audition), கார்ல் வெதர்ஸ், அங்கு உடன்நடித்த ஸ்டாலோனின்நடிப்பில் உள்ள குறைகளை வெளிப்படையாகவும், துணிச்சலாகவும் விமர்சித்தார்.

கார்ல் வெதர்ஸின் விமர்சனங்களை நேர்மறையாக எடுத்து கொண்ட சில்வெஸ்டர் ஸ்டாலோன், கார்ல் வெதர்ஸ்தான் "அப்போல்லோக்ரீட்" கதாபாத்திரத்திற்கு பொருத்தமானவர் என அவரை தேர்ந்தெடுத்தார். அப்படத்தில் இருவருக்குமான குத்து சண்டை காட்சிகளில் சில இடங்களில், ஒருவரையொருவர் நிஜமாக தாக்கி கொள்ள நேர்ந்தது குறிப்பிடத்தக்கது.

இதை தொடர்ந்து ராக்கி2, ராக்கி3 மற்றும் ராக்கி4 என 4 பாகங்களிலும் கார்ல் வெதர்ஸ், ஸ்டாலோனுடன் நடித்து புகழ் பெற்றார். மேலும், 1987ல் வெளியான அர்னால்டு ஸ்வார்ஸ்னேக்கர் கதாநாயகனாக நடித்த ப்ரிடேட்டர் (Predator) திரைப்படத்தில் அர்னால்டுக்கு இணையானகதாபாத்திரத்திலும்நடித்து புகழ் பெற்றார்.

கார்ல் வெதர்ஸ், அமெரிக்காவின் லாஸ் ஏஞ்சலிஸ் நகரில் தனது குடும்பத்தினருடன் வசித்து வந்தார்.

இந்நிலையில், தனது 76வது வயதில் பிப்ரவரி 1 அன்று கார்ல் வெதர்ஸ் காலமானார்.

"பிப்ரவரி 1 அன்று உறக்கத்திலேயே கார்ல் வெதர்ஸின் உயிர் பிரிந்தது. அவர் ஒரு நல்ல குடும்ப தலைவனாக வாழ்ந்தார். விளையாட்டிலும், கலைத்துறையிலும் தனி முத்திரையை பதித்ததை தாண்டி ஒரு மிகச் சிறந்த மனிதராக திகழ்ந்தார்" என கார்ல் வெதர்ஸின் குடும்பம் வெளியிட்டுள்ளஅறிக்கையில்தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஸ்டாலோன் உட்பட பல ஹாலிவுட் பிரபலங்கள் கார்ல் வெதர்ஸ் மரணத்திற்கு வருத்தம் தெரிவித்து சமூக வலைதளங்களில் இரங்கல் தெரிவித்து வருகின்றனர்.



# GOAT படப்பிடிப்பின்போது ரசிகர்களுடன் செல்பி எடுத்த நடிகர் விஜய்


நடிகர் விஜய் தமிழக வெற்றி கழகம் என்கிற தனது கட்சியின் பெயரை அறிவித்தார். விஜயின் அரசியல் பிரவேசத்திற்கு ரசிகர்கள் ஆரவாரம் செய்து வருகின்றனர்.

இதற்கிடையே, நடிகர்விஜய்யின் 68வது படமானGOAT வெங்கட் பிரபு இயக்கத்தில் படப்பிடிப்பு விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது.

இந்நிலையில், இந்த படத்தின் படப்பிடிப்புக்காக இன்று நடிகர் விஜய் புதுச்சேரி ஏஎஃப்டி பஞ்சாலைக்கு வந்தார். விஜய் வந்ததை அறிந்து அங்கு ரசிகர்கள் குவிந்தனர்.

நடிகர் விஜய் பெரிய வேன் மீது ஏறி, ரசிகர்களை பார்த்து கை அசைத்தார். பிறகு ரசிகர்களுடன் சேர்ந்து செல்பி எடுத்துக் கொண்டார்.

# ரூ.200 கோடி வசூல் முதலில் சாதித்த திரைப்படம்



கடந்த வருடம் வெளியான திரைப்படங்களில் பாக்ஸ் ஆபீஸ் வசூலில் மிகப்பெரும் வெற்றி பெற்றவைகளில் பெரும்பாலானவை "ஆக்ஷன் திரில்லர்" ரகத்தை சேர்ந்தவை.

பெரிய ஹீரோ, மிரட்டும் வில்லன் கதாபாத்திரம் மற்றும் அதிர வைக்கும் பிரமாண்ட சண்டை காட்சிகள் இடம் பெற்றால்தான் திரைப்படங்களை காண இளைஞர்கள் திரையரங்குகளுக்கு வருவதாகவும், வினியோகஸ்தர்களும், திரையரங்கு உரிமையாளர்களும் பல ஊடகங்களில் கருத்து தெரிவிக்கின்றனர்.

இவை இல்லாத திரைப்படங்கள் ஓரளவு வசூலை செய்தாலும் பெரும் வெற்றியை பெற முடிவதில்லை.

முதல்முதலாக ரூ.200 கோடி வசூல் செய்த இந்திய திரைப்படத்தில் சண்டை, வன்முறை, இரட்டை அர்த்த நகைச்சுவை, ஆணாதிக்க காட்சிகள் எதுவும் இன்றி மென்மையான குடும்ப கதையை களமாக கொண்டது.

1994ல் வெளிவந்த, ராஜ்ஸ்ரீ புரொடக்ஷன்ஸ் (Rajshri Productions) தயாரிப்பில் சூரஜ் பர்ஜாத்யா எழுதி, இயக்கிய இந்தி திரைப்படமான, "ஹம் ஆப்கே ஹை கோன்" (Hum Aapke Hain Koun), இந்தியாவில் ரூ.200 கோடிக்கும் மேல் (ரூ.210 கோடி) வசூல் செய்த முதல் திரைப்படமாகும்.

1994 ஆகஸ்ட 4 அன்று தெற்கு மும்பை பகுதியின் லிபர்டி திரையரங்கில் வெளியாகி அங்கு மட்டுமே 100 வாரங்களுக்கும் மேலாக ஓடியது.

குறைந்த அளவு திரையரங்குகளில் வெளியானாலும், வாய்மொழி விளம்பரத்திலும், குடும்பம் குடும்பமாகவே பார்க்க சென்ற மக்களின் அமோக வரவேற்பிலும், பிற திரையரங்குகளிலும் வெளியிடப்பட்டது.

தமிழில் "நான் உங்களுக்கு யாராம்?" எனும் பொருள்படும் தலைப்பில் வெளியான இத்திரைப்படத்தின் தயாரிப்பு செலவு ரூ.6 கோடி என்பது குறிப்பிடத்தக்கது.

"ஹம் ஆப்கே ஹை கோன்" திரைப்படத்தில் சல்மான் கான் கதாநாயகனாகவும், மாதுரி தீட்சித் கதாநாயகியாகவும் நடித்திருந்தனர்.

பிரேம் எனும் இளைஞரும் அவரது அண்ணியின் தங்கையான நிஷாவும் ஒருவரையொருவர் விரும்புகின்றனர். அவர்கள் எண்ணம் நிறைவேறியதா என்பதை குடும்ப கொண்டாட்டங்களின் பின்னணியில் கூறும் ஒரு நேர்த்தியான கதையமைப்பே இப்பட வெற்றிக்கு காரணமாக அமைந்தது.

ராம்லட்சுமண் இசையில் 14 பாடல்கள் இடம் பெற்றிருந்தன. பெரும்பாலான பாடல்களை எஸ்.பி. பாலசுப்ரமணியம் மற்றும் லதா மங்கேஷ்கர் பாடியிருந்தனர்.

இனிமையான பாடல்கள் இப்படத்தின் வெற்றிக்கு மிக முக்கிய காரணம்.

தற்போது இந்தியாவின் முன்னணி பாலிவுட் ஆக்ஷன் ஹீரோவாக வலம் வரும் சல்மான் கான் கதாநாயகனாக நடித்த இப்படத்தில் ஒரு சண்டை காட்சி கூட கிடையாது என்பது மற்றுமொரு ஆச்சரியம் அளிக்கும் தகவல்.

இதில் பிரேம் வேடத்தில் நடிக்க முதலில் தயாரிப்பாளர்கள் தேர்வு செய்த நடிகர், அமீர் கான். ஆனால், இக்கதை தன்னை பெரிதாக ஈர்க்கவில்லை என அவர் கூறியதால், வாய்ப்பு சல்மான் கானுக்கு சென்றது.

"ஹம் ஆப்கே ஹை கோன்" பட வசூல் சாதனையை, சுமார் 15 வருடங்கள் கடந்து அமீர் கான் கதாநாயகனாக நடித்து வெளியான "த்ரீ இடியட்ஸ்" ரூ.300 கோடி வசூல் செய்து முறியடித்தது.

# இரண்டாம் பாகத்திற்கு ரெடியான ஆர்.ஜே.பாலாஜி எந்த படம் தெரியுமா?



ஆர்.ஜே.பாலாஜி கதாநாயகனாக நடித்த திரைப்படம் 'சிங்கப்பூர் சலூன்'. இந்த படத்தை 'ரவுத்திரம்', 'இதற்குத்தானே ஆசைப்பட்டாய் பாலகுமாரா', 'காஷ்மோரா' உள்ளிட்ட படங்களை இயக்கிய கோகுல் இயக்கியுள்ளார். ஆர்.ஜே.பாலாஜி இதில் சிகையலங்கார நிபுணராக நடித்துள்ளார்.

இந்த படத்தை வேல்ஸ் பிலிம் இண்டர்நேஷனல் பட நிறுவனம் சார்பில் ஐசரி கே கணேஷ் தயாரித்துள்ளார். இப்படத்தில் இயக்குனர் லோகேஷ் கனகராஜ் மற்றும் நடிகர் ஜீவா சிறப்பு தோற்றத்தில் நடித்துள்ளனர். 'சிங்கப்பூர் சலூன்' திரைப்படம் 25ஆம் தேதி திரையரங்குகளில் வெளியாகி நல்ல வரவேற்பை பெற்றது.

இதையடுத்து இப்படத்தின் வெற்றி விழா சமீபத்தில் நடைபெற்றது. இதில் பேசிய ஆர். ஜே.பாலாஜி, "இந்தப் படம் வெற்றி அடைந்துள்ளதில் மகிழ்ச்சி.

இரண்டாம் பாதியில் அரவிந்த் சாமி கதாபாத்திரத்தைப் பார்த்துவிட்டு இவரைப் போல ஒருவர் நம் வாழ்வில் வந்துவிட மாட்டார்களா என நிறையப் பேர் சொன்னார்கள்.

எனது சிறந்த நடிப்பைக் வெளிக்கொண்டு வந்த இயக்குனர் கோகுலுக்கு நன்றி. 'எல்.கே.ஜி 2', 'மூக்குத்தி அம்மன் 2' போன்ற ஐடியாவும் உண்டு. அதையும் ஐசரி சாரிடம்தான் செய்வேன்" என்று பேசினார்

# மேற்கிந்திய தீவுகளுக்கு எதிரான 2வது ஒருநாள் போட்டி ஆஸ்திரேலிய அணி அபார வெற்றி



வெஸ்ட் இண்டீஸ் ஆஸ்திரேலியா அணிகள் இடையிலான 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் மெல்போர்னில் நடந்த முதலாவது ஆட்டத்தில் ஆஸ்திரேலிய அணி 8 விக்கெட் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்று தொடரில் 10 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கிறது.

இந்த நிலையில் இவ்விரு அணிகள் இடையிலான 2வது ஒருநாள் போட்டி சிட்னியில் இன்று நடைபெற்றது. இந்த ஆட்டத்துக்கான டாசில் வென்ற வெஸ்ட் இண்டீஸ் அணி முதலில் பந்துவீசுவதாக அறிவித்தது.


அதன்படி முதலில் பேட்டிங் செய்த ஆஸ்திரேலியா நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்கள் முடிவில் 9 விக்கெட்டுகள் இழப்பிற்கு 258 ரன்கள் அடித்தது. அந்த அணியில் அதிகபட்சமாக சீன் அப்போட் 69 ரன்கள் அடித்தார். வெஸ்ட் இண்டீஸ் தரப்பில் அதிகபட்சமாக குடகேஷ் மோட்டி 3 விக்கெட்டுகள் வீழ்த்தினார்.

இதனையடுத்து 259 ரன்கள் அடித்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய வெஸ்ட் இண்டீஸ் பேட்ஸ்மேன்கள் ஆஸ்திரேலியாவின் அபார பந்துவீச்சை சமாளிக்க முடியாமல் விரைவில் ஆட்டமிழந்தனர். 43.3 ஓவர்கள் மட்டுமே தாக்குப்பிடித்த வெஸ்ட் இண்டீஸ் 175 ரன்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்தது.

இதன் மூலம், ஆஸ்திரேலியா 83 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. வெஸ்ட் இண்டீஸ் அணியில் அதிகபட்சமாக கீசி கார்ட்டி 40 ரன்கள் அடித்தார். ஆஸ்திரேலிய அணியில் அதிகபட்சமாக ஜோஷ் ஹெசில்வுட் மற்றும் சீன் அப்போட் தலா 3 விக்கெட்டுகள் வீழ்த்தினர்.

இந்த வெற்றியின் மூலம் 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரை ஆஸ்திரேலியா 20 என்ற கணக்கில் கைப்பற்றியுள்ளது.

# 6 ஜோடி ஷூக்கள் ரூ.66 கோடி ஏலத் தொகை: காரணம் என்ன?



அமெரிக்காவில் மிகவும் பிரபலமான விளையாட்டு, "பாஸ்கெட் பால்" (basketball) எனும் கூடைப்பந்து. கூடைப்பந்து விளையாட்டில் மிகவும் புகழ் பெற்ற அமெரிக்க சாதனையாளர், மைக்கேல் ஜோர்டன்.

1980களிலும், 90களிலும் கூடைப்பந்து விளையாட்டு பிரபலம் அடைய மைக்கேல் ஜோர்டன் ஒரு முக்கிய காரணம்.

1984 தொடங்கி 2003 வரை ஆண்டுதோறும் நடைபெறும் என்பிஏ ஃபைனல்ஸ் (NBA Finals) எனப்படும் அந்நாட்டின்"தேசிய கூடைப்பந்து சங்கம்" (National Basketball Association) நடத்தும் போட்டித் தொடரில் 6 முறை "சிகாகோ புல்ஸ்" அணிக்காக சாம்பியன்ஷிப் வென்றார் ஜோர்டன்.

மேலும், ஒலிம்பிக் பந்தயங்களிலும் 2 முறை ஜோர்டன் தங்க பதக்கம் வென்றார்.

2003ல் கூடைப்பந்து விளையாட்டுகளில் இருந்து ஓய்வு பெற்ற ஜோர்டனுக்கு தற்போது 60 வயது ஆகிறது.

இந்நிலையில், மைக்கேல் ஜோர்டன் பயன்படுத்திய "ஸ்னீக்கர்ஸ்" (sneakers) எனப்படும் விளையாட்டுக்கான காலணிகள் ஏலத்தில் விற்பனைக்கு வந்தன. பருமனான கேன்வாஸ் துணியால் தயாரிக்கப்பட்டு ரப்பரில் செய்யப்பட்ட ஸோல்கள் அமைந்த ஜோர்டன் அணிந்த ஸ்னீக்கர்களின் ஏலம் பெரிதும் எதிர்பார்ப்பை உண்டாக்கியது.

பிரபல சோத்பி'ஸ் (Sotheby's) ஏல நிறுவனம் நடத்திய இந்த ஏலத்தில் ஜோர்டன் பயன்படுத்திய 6 ஜோடி ஸ்னீக்கர்கள், ரூ.66,39,96,400.00 ($8 மில்லியன்) தொகைக்கு ஏலம் போனது.

இந்த ஷூக்களை, ஜோர்டன், 1991, 1992, 1993, 1996, 1997 மற்றும் 1998 ஆண்டுகளில் சாம்பியன்ஷிப் போட்டிகளில் அணிந்திருந்தது குறிப்பிடத்தக்கது.

இவற்றை ஏலத்தில் வாங்கியவரின் விவரங்களை ஏல நிறுவனம் தற்போது வரை வழங்கவில்லை.

ஜோர்டன் அணிந்திருந்த ஜெர்ஸி, 2022ல், சுமார் 10 மில்லியன் அமெரிக்க டாலருக்கு விலை போனது குறிப்பிடத்தக்கது.

# இரட்டை சதம் அடித்த ஜெய்ஸ்வால் நட்சத்திர வீரராக திகழ்வார் கிராலி பாராட்டு



இங்கிலாந்துக்கு எதிராக விசாகப்பட்டினத்தில் நடைபெற்று வரும் 2வது டெஸ்டில் ஜெய்ஸ்வால் 209 ரன் குவித்து முத்திரை பதித்தார். தனது 6வது டெஸ்டில் முதல் முறையாக இரட்டை சதத்தை பதிவு செய்தார். இதேபோல பும்ரா 45 ரன் கொடுத்து 6 விக்கெட் வீழ்த்தினார்.

இந்த இருவரது பங்களிப்பையும் இங்கிலாந்து தொடக்க ஆட்டக்காரர் கிராலி பாராட்டியுள்ளார். இது தொடர்பாக அவர் கூறியதாவது:

ஜெய்ஸ்வாலின் ஆட்டம் அபாரமாக இருந்தது. நம்ப முடியாத இன்னிங்ஸ் அவர் ஒரு அற்புதமான வீரராக திகழ்கிறார். அவர் நட்சத்திர வீரராக உருவெடுப்பார்.

பும்ராவின் பந்து வீச்சு நம்ப முடியாத வகையில் அபாரமாக இருந்தது. இது மாதிரியான ஆடுகளத்தில் சிறப்பாக வீசியது பாராட்டத்தக்கது.

இவ்வாறு அவர் கூறினார்.

இங்கிலாந்து அணியில் அதிக ரன் எடுத்தவர் கிராலி ஆவார். தனது 26வது பிறந்தநாளில் அவர் 76 ரன்கள் எடுத்தார்.


# தாய்லாந்து ஓபன் பேட்மிண்டன்: இந்திய வீராங்கனை அரையிறுதியில் தோல்வி

தாய்லாந்து மாஸ்டர்ஸ் சூப்பர் 300 பேட்மிண்டன் தொடர் தாய்லாந்தில் நடைபெற்று வருகிறது.




இந்தத் தொடரில் நேற்று நடைபெற்ற மகளிர் ஒற்றையர் பிரிவின் அரையிறுதி ஆட்டத்தில் இந்தியாவின்அஷ்மிதா சாலிஹா, தாய்லாந்து வீராங்கனை சுபநிடா கேட்தாங்குடன் மோதினார்.

இதில் அஷ்மிதா சாலிஹா 1321, 1221 என்ற செட் கணக்கில் சுபநிடா கேட்தாங்கிடம் தோல்வி அடைந்து வெளி யேறினார்.



**அமிழ்தினும் ஆற்ற இனிதேதம் மக்கள்**

**சிறுகை அளாவிய கூழ்**

**விளக்கம்:**

தம்முடைய மக்களின் சிறு கைகளால் அளாவப்பெற்ற உணவு, பெற்றோர்க்கு அமிழ்தத்தைவிடமிக்கஇனிமைஉடையதாகும். சாலமன் பாப்பையா விளக்க உரை: தம் பிள்ளைகளின் சிறு கையால் பிசையப்பட்ட கூழ், அமிழ்தைக் காட்டிலும் மிக இனிது.

நமது தினகனி
செய்திகள் மற்றும் விளம்பரங்கள்
தொடர்புக்கு:
94436 99066

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 63815.1. Editor: KANI RAJA V.